தினக்குரல் THINAKKURAL


கல்விக்குரல்


தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை - 13

26.11.2021 **வினாப்பத்திரம் - I** **1 மணித்தியாலம்**

மாணவர் பெயர் : .....

- **01 ஆம், 02 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.**

01. 

1). 


2). 

3). 

02. 

1). 

2). 

3). 

03. 
உரு A


உரு B

உரு A போன்ற உருவை பெறுவதற்கு உரு B யில் செய்யக்கூடிய மாற்றங்களின் எண்ணிக்கை?

1). நான்கிலும் குறைவு

2). நான்கு ஆகும்.

3). நான்கிலும் அதிகம்

04. 
உரு A


உரு B


உரு A சரியான முறையில் வரையப்பட்டுள்ளது. உரு B பிழையாக வரையப்பட்டுள்ளது. உரு B ஐ சரியான முறையில் மாற்றம் செய்வதற்கு செய்ய வேண்டியது?


1). உரு B யில் ஒரு இலையைச் சேர்த்தல்


2). உரு A யில் ஒரு இலையைச் சேர்த்தல்


3). உரு B யில் ஒரு இலையை நீக்குதல்.


- **05 ஆம் , 06 ஆம் வினாக்களில் ஒரு உரு ஏதோ ஒரு வகையில் வேறுபட்டுள்ளது. அவ்வுருவைத் தெரிவு செய்க.**


05. 1). 

2). 


3). 


06. 1). 

2). 

3). 

07. அருகிலுள்ள ஈர்க்குத் துண்டுகள் அனைத்தையும் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய உருக்களை தெரிவு செய்க.



1). 

2). 

3). 

www.thinakkuralkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை
நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

08. கீழே உள்ள சம்பவங்களை ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையினைத் தெரிவு செய்க.



1). BCEDA
2). BCDEA
3). AECDB

- **09 ஆம் , 10 ஆம் வினாக்களில் ஏதேனும் ஒரு வகையில் பொருத்தமற்ற சொற்சோடியைத் தெரிவு செய்க.**

09. 1). தொலைபேசி - குறுஞ்செய்தி 2). வானொலி - இணையம் 3). கணினி - மின்னஞ்சல்

10. 1). மீன் - குட்டி 2). தவளை - பேத்தை 3). மான் - குட்டி

- **பின்வரும் பாடலை அவதானித்து 11 ஆம் , 12 ஆம் வினாக்களிற்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**


ஒழுக்கம் சிறந்தது பாப்பா - உன்
உயிரின் உயர்ந்தது பாப்பா
நன்னெறி சேர்த்திட வேண்டும் பாப்பா
நல்லோரை சார்ந்திட வேண்டும்.

11. ஒழுக்கம் எதனிலும் மேலானதாகக் காணப்படுகின்றது.
1). நன்னெறி 2). உயிர் 3). நல்லோர்

12. இங்கு பாப்பா என குறிப்பிடப்படுவது?
1). மாணவர்கள் 2). குழந்தைகள் 3). முதியவர்கள்


13. "வேலியே பயிரை மேய்ந்தது போல" என்ற உவமைத் தொடரின் கருத்தாக காணப்படுவது?
1). பாதுகாக்க வேண்டியவரே அழித்தல்.
2). மாறு வேடம் பூணுதல்.
3). பகைமையை வளர்த்தல்.

14. எதிர்க்கருத்தை உணர்த்தும் இணைமொழியாக காணப்படுவது?
1). உற்றார் - உறவினர் 2). மலையும் - மடுவும் 3). சீரும் - சிறப்பும்


15. 

தரப்பட்ட உருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
1). 10
2). 11
3). 12

- **16 ஆம் , 17 ஆம் வினாக்களிற்கு கீழே தரப்பட்டுள்ள எண்கோலத்தை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.**

16. 

1). 2
2). 3
3). 4

17. 

1). 8
2). 9
3). 10

18. 2021 ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதல் நாள் புதன் கிழமையாயின், சரியான விடை
1). அம்மாதத்திலுள்ள செவ்வாய்க் கிழமைகளின் எண்ணிக்கை ஐந்தாகக் காணப்படும்.
2). இம்மாதத்தின் இறுதிநாள் வெள்ளிக்கிழமையாகக் காணப்படும்.
3). இம்மாதத்தில் 15ஆம் திகதி, 21ஆம் திகதி என்பன புதன் கிழமையாகக் காணப்படும்.

www.ikedu.lk

19. தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை பகுதி II வினாத்தாள் தொடர்பான சரியான கூற்றாக அமையாதது.

1). இவ்வினாத்தாளுக்கு விடை அளிப்பதற்கான நேரம் ஒரு மணித்தியாலத்திலும் கூடவாகும்.

2). இவ்வினாத்தாளில் மொத்தம் 40 வினாக்கள் காணப்படும்.


3). இவ்வினாத்தாள் பல்வேறு பாடங்களை ஒன்றிணைந்ததாகக் காணப்படும்.


20. 30 தொடக்கம் 45 வரையுள்ள எண்களை எழுதும் போது 3 எழுதப்பட்ட எண்களின் எண்ணிக்கை யாது?

1). 11 2). 13 3). 12

21. இவ்வுருக்களை A, B ஆகிய இடங்களில் வெட்டும் போது கிடைக்கும் முகங்களின் வடிவங்கள் முறையே,

உரு - A





உரு - B

1). வட்டம் , வட்டம்

2). வட்டம், செவ்வகம்

3). செவ்வகம், வட்டம்

- **22 ஆம், 23 ஆம் வினாக்களிற்கு கீழே தரப்பட்டுள்ள தகவலை அடிப்படையாகக் கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.**

வினோத்திடம் சிவப்பு, நீலம், கறுப்பு நிறப் பேனைகள் உள்ளன. சரோஜாவிடம் நீலம், கறுப்பு, பச்சை நிறப் பேனைகள் உள்ளன. பாமினாவிடம் பச்சை, செம்மஞ்சள் , கறுப்பு நிறப் பேனைகள் உள்ளன.


22. மூவரிடமுள்ள பேனையின் நிறம் யாது?

1). கறுப்பு 2). நீலம் 3). சிவப்பு

23. சரோஜா, பாமினா ஆகிய இருவரிடமும் உள்ள அதே வேளை, வினோத்திடம் காணப்படாத பேனையின் நிறம் யாது?

1). நீலம் 2). கறுப்பு 3). பச்சை


24. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது அதே வடிவில் காணப்படும் உருவைத் தெரிவு செய்க.

1). 


2). 

3). 

25. உரு A யில் உள்ள தராசானது சமநிலையில் காணப்படுகின்றது எனின், உரு B ஐ சம நிலையடைய செய்வதற்கு மற்றைய பக்கத்தில் வைக்கப்பட வேண்டிய உருவைத் தெரிவு செய்க.



உரு - A



உரு - B

1). △ △ ○ 2). □□○ 3). ○ ○ ○

26. 580, 5760, 3711, 59 இவ் எண்களில் பத்தினிடத்தில் காணப்படும் இலக்கத்தில் பெறுமதி கூடிய , பெறுமதி குறைந்த எண்கள் முறையே,

1). 5760 , 59 2). 59 , 3711 3). 580 , 3711


27. மகேஸ் 2 ரூபா குற்றிகளாக 100.00 ரூபாவும், மனோஜ் 5 ரூபா குற்றிகளாக 120.00 ரூபாவும் வைத்திருந்தனர். அந்தப் பணத்தில் மகேஸ் ரூ.12.00 பெறு மதியான 2 பேனைகளையும் மனோஜ் ரூ.25.00 பெறுமதியான 3 புத்தகங்களையும் வாங்கினார்கள். இருவரிடமும் மீதியாக உள்ள நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?

1). 96 2). 47 3). 74

28. குமாரினதும் அவனது தந்தையினதும் தற்போதைய வயதுகளின் கூட்டுத்தொகை 50 ஆகும். என்னும் 5 ஆண்டுகளில் தந்தையின் வயதானது குமாரின் வயதின் மூன்று மடங்காக காணப்படும் எனின், தற்போதைய தந்தையின் வயது யாது?

1). 40 2). 45 3). 30

29. இக்கனவுருக்குற்றியில் ஒருமுகமேனும் கண்ணுக்குத் தெரியாத சிறிய சதுரமுகிக் குற்றிகள் எத்தனை காணப்படுகின்றன.



1). 01


2). 02

3). 04


www.lkedu.lk

30. 5 இற்கும் 20 இற்கும் இடையிலுள்ள ஒற்றை எண்களை ஏறுவரிசைப்படுத்தும் போது நடுவில் காணப்படும் ஒற்றை எண் யாது?

1). 11 2). 13 3). 15

31. 

உருக்கள் அமைந்துள்ள ஒழுங்கினை அடிப்படையாகக் கொண்டு ? குறியினால் காட்டப்படும் நிரையில் காணப்படும் குறியீட்டு கூட்டத்தைத் தெரிவு செய்க.


1).  2).  3). 

32. கயல் விழிக்கு 3 அண்ணாமார்களும் ஒரு தங்கையும் உள்ளனர் எனின், இக்குடும்பத்திலுள்ள மூத்தவளும் இளையவளும் முறையே,


1). ஆண் , ஆண் 2). பெண் , பெண் 3). ஆண் , பெண்

33. 2017 ஆம் ஆண்டு தைமாதம் 11 ஆம் திகதி வியாழன் ஆயின் இந்த மாதத்தில் உள்ள திங்கட் கிழமைகளின் திகதிகளின் கூட்டுத் தொகை யாது?

1). 75 2). 80 3). 85

34. 


உரு A


உரு B

உரு A யில் 8 துண்டுகள் காணப்படுகின்றன. அவ் துண்டுகளிலிருந்து உரு B யை உருவாக்குவதற்கு தேவையான துண்டுகளின் இலக்கங்கள் எவை?

1). 5, 4, 1
2). 4, 7, 8
3). 7, 4, 2

- **35 ஆம் , 36 ஆம் வினாக்களிற்கு கீழே தரப்பட்டுள்ள வென்னுருவை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.**




35. ஏதேனும் இரண்டு வட்டப் பிரதேசங்களுக்கு மட்டும் உரிய ஆங்கில எழுத்துக்கள் எவை?

1). C, F 2). E, F 3). D, E

36. இவ்வட்டங்கள் தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1). C எழுத்தானது மூன்று வட்டங்களுக்கும் பொதுவானது
2). F எழுத்தானது இரண்டு வட்டங்களுக்கும் பொதுவானது
3). A எழுத்தானது ஒரு வட்டத்துக்கு மாத்திரம் உரியதாகும்.

37. கீழே உள்ள படங்களுக்குப் பொருத்தமான பொதுவான பெயரைத் தெரிவு செய்க.




1). இருபரிமாண உருக்கள்
2). திண்ம உருக்கள்
3). முப்பரிமாண உருக்கள்

38. நீளத்தை அளக்கும் அலகுகளை பெறுமதி கூடியதிலிருந்து பெறுமதி குறைந்தது வரை ஒழுங்கு படுத்தினால் கிடைக்கும் விடையைத் தெரிவு செய்க.

1). கிலோமீற்றர், சென்ரிமீற்றர், மீற்றர், மில்லிமீற்றர்
2). மில்லிமீற்றர், சென்ரிமீற்றர், மீற்றர், கிலோமீற்றர்
3). கிலோமீற்றர், மீற்றர், சென்ரிமீற்றர், மில்லிமீற்றர்

- **வீடு ஒன்றின் கிடைப்படம் கீழே தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து 39 ஆம் , 40 ஆம் வினாக்களிற்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**



39. குமார் தான் நிற்கும் அறையிலிருந்து ஏனைய அனைத்து அறைகளுக்கும் சென்று பிரதான வாசலினூடாக வெளியேறினான் எனின், அவன் சென்ற சரியான திசை ஒழுங்கு,

1). மேற்கு , வடக்கு , மேற்கு , தெற்கு , கிழக்கு
2). வடக்கு , மேற்கு , தெற்கு , மேற்கு , வடக்கு
3). வடக்கு , மேற்கு , தெற்கு , வடமேற்கு , தெற்கு

40. இங்கே காணப்படும் அறைகளில் எந்த அறையிலிருந்து அதிகளவான அறைகளுக்கு செல்ல முடியும்?

1). B 2). K 3). A

www.kalvikkural.lk

தினக்குரல் THINAKKURAL

கல்விக்குரல்

தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை - 13

26.11.2021 **வினாப்பத்திரம் - II** **1 மணி 15 நிமிடம்**

மாணவர் பெயர் : .....

01). பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

"மான் குட்டியே , நீ ஒரு வீரன்! கள்ளம் கபடம் இல்லாதவன். பெரிய மிருகங்களும் , சிறிய மிருகங்களும் இப் பாதையால் என்னைக் கடந்து சென்றது. வேறு சில மிருகங்கள் என்னைக் கண்டதும் விரைவாக ஓடி விட்டன. நான் உதவி கேட்கும் முன்பே அவை அப்பால் சென்று விட்டன. இந்த விடயம் உனக்குத் தெரியுமா? சில மிருகங்கள் என்னைப் பார்த்துக் கேலி பண்ணிச் சிரித்தன. எனக்கு எரிச்சலையும் அடங்காத கோபத்தையும் உண்டாக்கின." என்று சிங்கம் கூறியது. "நான் அவற்றுக்குத் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்" என்று கோபத்துடன் கூறியது.

i). ஆண்பால் ஒருமைப் பெயர்ச் சொல் ஒன்று எழுதுக. .....

ii). இணைமொழிச் சொல் ஒன்றை எழுதுக. .....

iii). பந்தியில் காணப்படும் எதிர்ச் சோடி சொற்களை எழுதுக. .....

iv). இங்கே காணப்படும் நிறுத்தற் குறியீடுகள் இரண்டின் பெயரை எழுதுக. .....

v). எனக்கு எரிச்சலையும் அடங்காத கோபத்தையும் உண்டாக்கின என்று சிங்கம் யாரிடம் கூறியது. .....

vi). வினை அடைமொழிச் சொல் ஒன்று தருக. .....

02). சரியாக எழுதப்பட்ட சொல்லை தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

i). நாகரீகம் , நாகரிகம் , நாகறீகம் ii). முந்நூறு , முண்ணூறு , மூந்னூறு iii). வேர்வை , வியர்வை , வியற்வை

03). பின்வரும் தொடருக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

i). பொருட்களை உற்பத்தி செய்யும் இடம் .....

ii). புராதன பொருட்களை சேகரித்து வைக்கும் இடம் .....

04). பின்வரும் சொற்களிலுள்ள உயிர்க்குறிகளை எழுதுக.

i). கொம்பு : ..... ii). மென்மையான பூ : .....

05). பின்வரும் மரபுச் சொற்களின் கருத்தை எழுதுக.

i). இலவு காத்த கிளி : ..... ii). ஒத்துப் பாடுதல் : .....

06). வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.

i). ஆய ..... அறுபத்து நான்கு ஆகும். (களைகள் , கலைகள் , கழைகள்)

ii). வேதனையால் துன்பப்பட்ட சிறுவன் செல்லும் ..... தெரியாமல் தடுமாறினான். (வழி, வலி , வளி)

iii). அப்பா விறகுகளை ..... வெட்டினார். (பாலமாக , பாளமாக , பாழமாக)

07). பின்வரும் பிராணிகளில் ஆணுக்குரிய மரபுச் சொல்லை எழுதுக.

i). நண்டு : ..... ii). குதிரை : .....

08). பின்வரும் சொற்களை பிரித்து எழுதுக.

i). நாட்காட்டி : ..... ii). கருங்குளவி: .....


www.ikeau.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்

தமிழ் மொழி மூலம்



ENGLISH MEDIUM

සිංහල මාධ්‍ය

இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

09). பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

(ட , ழ , ண , லு , ங் , டி)

i). வெ ..... காயம் ii). வி ..... மியம் iii). கட் ..... டம்

10). கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.


சென்றது / கழுகு / கால்களால் / பாம்பைக் / பறந்து / கௌவிக்கொண்டு


.....

11). தரப்பட்ட ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களை தமிழில் எழுதுக.

i) .Happy birthday : ..... ii). Hurry up please : .....

12). கீழே தரப்பட்ட படங்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.

i).  .....

ii).  .....

13). பின்வரும் சிங்களச் சொற்கள் தமிழில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

i). செல்லம் மிதுல : ..... ii). வித்யாகாரய : .....

14). பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை எழுதுக.

i). நத்தார் வாழ்த்துக்கள் : ..... ii). துள்ளிப் பாயுங்கள் : .....

- **தரப்பட்ட வெற்றிடங்களில் சரியான விடையை எழுதுக.**


15). 30027 இவ் எண்ணை சொற்களில் எழுதுக. .....

16). xxi இவ் எண்குறிக்கு அடுத்துவரும் எண்குறியின் முன்னுள்ள எண்குறியையும் பின்னுள்ள எண்குறியையும் உரோம எண்குறியில் எழுதுக.

i. முன்னுள்ள எண்குறி : ..... ii. பின்னுள்ள எண்குறி : .....

17). தரம் 5 A வகுப்பில் 289 மாணவர்களும் தரம் 5 B வகுப்பில் 337 மாணவர்களும் உள்ளனர். இவ்விரு வகுப்பு மாணவர்களுக்குமிடையிலான வித்தியாசம் யாது?

.....

18). 

i. இவ் உருக்களை மாத்திரம் வைத்து உருவாக்கக்கூடிய திண்ம உருக்கள் 2 தருக.

.....

ii. அவ்வுருக்களின் உச்சிகளின் எண்ணிக்கை யாது?

.....

19). 500ml தேங்காய் எண்ணெயின் விலை ரூபா 200 எனின், 5 l தேங்காய் எண்ணையின் விலை யாது?

.....

20). முதலாவது வகுப்பறையில் 4 கதிரைகள் வீதம் 10 நிரைகளும் இரண்டாவது வகுப்பறையில் 3 கதிரைகள் வீதம் 15 நிரைகளும் காணப்பட்டன. இரண்டு வகுப்பறையிலும் உள்ள கதிரைகளின் கூட்டுத்தொகை யாது?

.....

21). மகிஷன் காலை 8 மணிக்கு 10 நிமிடங்கள் இருக்கும் வேளை வீட்டிலிருந்து புறப்பட்டு காலை 9.20 மணிக்கு பாடசாலையை அடைந்தான்.

i. அவன் வீட்டிலிருந்து புறப்பட்ட நேரத்தை இருபத்து நான்கு மணி நேர கடிகாரத்தில் எழுதுக. .....

ii. அவன் வீட்டிலிருந்து பாடசாலைக்கு செல்வதற்கு எவ்வளவு நேரம் செலவாகியிருக்கும்?

.....

22).  இவ் உருவின் நிழற்றப்படாத பகுதியை தசமமாக தருக.

.....

23). ஒவ்வொன்றும் 800ml கொள்ளளவு உள்ள 6 போத்தல்களிலுள்ள நீரை ஒரு பெரிய பாத்திரத்தில் ஊற்றும் போது அப்பாத்திரம் முழுமையாக நிரம்புவதற்கு என்னும் 300 ml நீர் தேவைப்பட்டது எனில், பெரிய பாத்திரம் கொள்ளும் நீரின் அளவு யாது?


.....

24). புத்தகம் ஒன்றின் விலை ரூபா. 30 ஆகவும் பென்சில் ஒன்றின் விலை ரூபா. 10 ஆகவும் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

i. 03 புத்தகங்களையும் 03 பென்சில்களையும் வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை? .....

ii. அப் பொருட்களை வாங்கிவிட்டு ரூபா. 50 தாள் காசு 03 ஐக் கடைக்காரரிடம் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் பாது?

.....

25).  இக் கடிகாரத்தில் காட்டப்படும் நேரத்தை வெவ்வேறு இரண்டு முறைகளில் எழுதுக.

i. ..... ii. .....

www.lkedu.lk

26). 3008, 4211, 1824 , 2832 இவ் எண்களை பெறுமதி கூடியதிலிருந்து பெறுமதி குறைந்தது வரை ஒழுங்குபடுத்துக.

.....

27). 328 மாம்பழங்களை 8 மாணவர்களுக்கு சமனாக பங்கிடும் போது 3 மாணவர்களுக்குக் கிடைக்கும் மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

.....


28).

15	**7**	**4**
9	**3**	**10**
5	**30**	

இங்கே காணப்படும் மூன்றின் மடங்குகளை ஏறுவரிசையில் எழுதுக.

.....

29).



இங்கே A யிலிருந்து F வரையிலான இடங்களுக்கான தூரங்கள் தரப்பட்டுள்ளன.

i. C யிலிருந்து E க்கு செல்வதற்கான தூரம் எவ்வளவு .....

ii. B யிலிருந்து D இற்கான தூரம் எவ்வளவு? .....

- **30 - 60 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

30). சூரிய நமஸ்காரப் படிமுறைகளில் ஒரே மாதிரி இருக்கும் படிமுறைகளாகக் காணப்படுவது?

1. 2ஆம் படிமுறை , 11 ஆம் படிமுறை
2. 1ஆம் படிமுறை , 6 ஆம் படிமுறை
3. 4ஆம் படிமுறை , 10ஆம் படிமுறை

31). வேரின் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரமாகக் காணப்படாதது.

1. மாதுளை
2. கறிவேப்பிலை
3. மா

32). சீதபேதி நோய் ஏற்படுவதற்கான காரணம் யாது?

1. அசுத்தமான நீர்
2. அசுத்தமான காற்று
3. அதிகளவு வெப்பம்

33). தெற்கு திசையிலிருந்து வீசும் காற்றுக்கு வழங்கப்படும் பெயர்.

1. கொண்டல்
2. மேலைக்காற்று
3. தென்றல் காற்று

34). நடுகைக்கு உகந்த வித்தொன்றில் காணப்படாத பண்பாக அமைவது.

1. புறத்தோல் பளபளப்பாகக் காணப்படல்
2. பூச்சி தாக்கம் உள்ளதாகக் காணப்படல்
3. வித்தின் உள்ளீடு நிரம்பியதாகக் காணப்படல்

35).



இப் படத்தில் காணப்படுபவர்,

1. கெப்பட்டி பொல திசாவ
2. D.P ஜயதிலக்க
3. அநாகரிக தர்மபால

36). கிறிஸ்தவர்கள் கொண்டாடும் விழாக்கள் மட்டும் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.

1. பெரிய வெள்ளி , நத்தார் , உயிர்த்த ஞாயிறு
2. நத்தார் , மீலாத்து விழா உயிர்த்த ஞாயிறு
3. பெரிய வெள்ளி , மிகுந்து ஊர்வலம் , ஹச் பெருநாள்

37). யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதி எப்பெயரால் அழைக்கப்படும்.

1. A1
2. A9
3. A6

38).

உருவிலுள்ள உடுத்தொகுதியின் பெயர்

1. ஓராயன்
2. பெருங்கரடி
3. சிம்மம்


39). இலங்கையில் வரட்சி அதிகமாக ஏற்படும் மாவட்டங்களாகக் காணப்படுவன.

1. யாழ்ப்பாணம் , கண்டி
2. மன்னார், அநுராதபுரம்
3. மட்டக்களப்பு , அம்பாறை

40). பாதசாரிகள் வீதியை கடக்கும் போது விபத்து ஏற்படுவதற்கு அதிக சந்தர்ப்பமாகக் காணப்படுவது,

1. வெள்ளைக் கோட்டினூடாக வீதியை கடக்கும் போது
2. வீதி குறியீட்டில் பச்சை மனிதன் ஒளிரும் போது வீதியை கடக்கும் போது
3. வீதி குறியீட்டில் சிவப்பு மனிதன் ஒளிரும் போது வீதியை கடக்கும் போது

41).




மேல் மாகாணத்தில் கடலுடன் கலக்கும் நதியையும் தென் மாகாணத்தில் கடலுடன் கலக்கும் நதியையும் குறித்துக் காட்டும் எழுத்துக்கள் முறையே,

1. A , E
2. B , C
3. B , D

42). பின்வருவனவற்றில் சமூக விரோத செயற்பாடாக காணப்படாதது,

1. சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுதல்
2. சிறுவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக செல்லாமை.
3. சிறுவர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாதல்

www.ikedu.lk

43). 

இக் குறியீடு குறித்துக் காட்டுவது.

1. பாதுகாப்பான புகையிரதக் கடவை
2. பாதுகாப்பில்லாத புகையிரதக் கடவை
3. முன்னால் பாதுகாப்பான புகையிரத கடவை.

44). கூட்டெரு ஒன்று தயாரிக்கத் தேவையான பொருட்கள் அடங்கிய விடைத் தொகுதி

1. யூரியா , ஆட்டெரு , மாட்டெரு
2. தாவரக்கழிவு , அமோனியா , விலங்கு கழிவு
3. ஆட்டெரு , தாவரக்கழிவு , மாட்டெரு

45). தற்போதைய காலத்தில் இலங்கையின் கல்வியை அதிகளவு பாதித்த ஒரு காரணி

1. யுத்தம்
2. நோய்
3. இயற்கை அனர்த்தம்

46). தண்ணீருடன் பாத்திரமொன்றில் பனிக்கட்டியை இடும் போது ஏற்படும் மாற்றமாக அமையாதது.

1. பாத்திரத்தின் வெளிப்புறத்தில் நீர்த் துளிகள் தோன்றும்.
2. பனிக்கட்டி நீரில் மிதக்கும்.
3. நீர் நீல நிறமாக மாறும்.

47). இலங்கையில் கடற்கரையுடன் தொடர்புபடும் மாகாணமாக அமையாதது

1. வட மாகாணம்
2. சப்பிரமுக மாகாணம்
3. மேல் மாகாணம்

48). இலங்கை முழுவதையும் ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்த மன்னன் யார்?

1. எல்லாளன்
2. காசியப்பன்
3. துட்டகைமுனு

49). இவ் உபகரணத்தின் பயன்பாடு யாது?



1. சுவரின் நிலைக்குத்து தன்மையை அறிதல்.
2. தளத்தின் கிடைத்தன்மையை அறிதல்.
3. சுவரின் நிலையை அளத்தல்.

50). இளஞ்சிவப்பு நிறத்தைப் பெறுவதற்கு சேர்க்க வேண்டிய இரண்டு நிறங்களும் எவை?

1. சிவப்பு, வெள்ளை
2. சிவப்பு , நீலம்
3. சிவப்பு , பச்சை

51). நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் மூலம் கிடைக்கு நன்மை அல்லாதது,

1. விரைவாக தகவல்களை அறிய முடியும்
2. தகவல்களை பெறுவதால் நீண்ட காலம் செல்லும்
3. இருந்த இடத்தில் தகவலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

52). உடலை நோயிலிருந்து பாதுகாக்கும் உணவுகள் அடங்கியுள்ள கூட்டம்.

1. அகத்தி , மாம்பழம் , முருங்கை
2. அப்பிள் , பிட்டு , இறைச்சி
3. முட்டை , பால் , இறைச்சி

53). பொலித்தீன் , பிளாஸ்ரிக் கழிவுகளை இடும் குப்பை தொட்டியின் நிறம் யாது?

1. செம்மஞ்சள்
2. நீலம்
3. பச்சை

54). சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் பொருளாகக் காணப்படுவது,

1. தாவரக் கழிவு
2. இலத்திரனியல் கழிவு
3. கடதாசிக்கழிவு

55). 

இக்காந்தத்தின் கவரும் தன்மை அதிகமாகக் காணப்படுவது

1. எல்லாப் பகுதியிலும்
2. மத்திய பகுதியில்
3. முனைவுப் பகுதியில்

56). இலங்கையில் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி காணப்படும் மாவட்டம்

1. பதுளை
2. நுவரேலியா
3. கண்டி



57). பூமி தன்னைத் தானே சுற்றுவதற்கு எடுக்கும் காலம்

1. 1 நாள்
2. 24 நாட்கள்
3. ஒரு வருடம்

58). எமது நாட்டில் அண்மைக் காலங்களில் அதிகளவு வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணமாக அமைவது,

1. எமது நாட்டில் வீதி தொடர்பான சட்டங்கள் நடைமுறையில் இல்லை.
2. வீதிச் சட்டங்களை சரியான முறையில் பின்பற்றாமை
3. எல்லா வாகனங்களிலும் அதிவேகமாக செல்லும் வாகனங்களாகக் காணப்படுகின்றமை.

59). பின்வருவனவற்றுள் ஒளிராத உருவை தெரிவு செய்க.

1. 
2. 
3. 

60). "அன்றொரு நாள் நானும் அப்பாவும் வீதியில் சென்று கொண்டிருந்த போது இரண்டு சிறுவர்கள் வீதியின் வெள்ளைக் கோட்டினூடாக கடக்கின்ற வேளையில் வீதியின் ஒரு பக்கத்திலிருந்து பார ஊர்தி ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. அப்போது ....." இச் சம்பவத்தின் தொடர்ச்சியை மூன்று வாக்கியங்களில் எழுதுக.

i. .....

ii. .....

iii. .....

www.ikedu.lk